**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்**

**முன்னிலை : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் நாள் புதன்கிழமை

**சுருக்கமுறை விசாரணை வழக்கு எண் 527/2023**

**CNR NO.TNTU09-004449-2023**

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், வாணியம்பாடி நகர காவல் நிலையம், குற்ற எண். 294/2017. |
| 2. | எதிரிகள் | 1.ஜெயிலாபுதீன் த/பெ.மொய்தீன்<br>2.சதாம் உசேன் த/பெ. சாபுதீன் |
| 3. | குற்றம் | இ.த.ச பிரிவுகள் 294(b), 323. |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 24.07.2017 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 02.08.2017 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | Station bail – 02.08.2017 – 02.08.2017 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 22.06.2023 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241–ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 07.10.2023 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | – |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1, அ.சா.2 – 21.02.2024<br>அ.சா.3 – 20.09.2024<br>அ.சா.4 – 18.06.2025<br>அ.சா.5 – 26.03.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 27.03.2026 |

| | | |
|---|---|---|
| 12 | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 01.04.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 255 (1) கீழ் விடுதலை. |

**<u>நீதித்துறை படிவம் எண்: 61</u>**

புகார்தாரர் : அரசுக்காக காவல் உதவி ஆய்வாளர், வாணியம்பாடி நகர காவல் நிலையம்.

எதிரிகள் : 1.ஜெயிலாபுதீன் த/பெ.மொய்தீன்
2.சதாம் உசேன் த/பெ. சாபுதீன்

குற்றம் : இ.த.ச பிரிவுகள் 294(b), 323.

முடிவு : இறுதியாக அரசு தரப்பில் எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரிகளை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 255 (1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது.

| வ. எண் | எதிரிகள் பெயர் | தந்தை / கணவர் பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1. | ஜெயிலாபுதீன் | மொய்தீன் | முஸ்லீம் | டிரைவர் | காதர்பேட்டை, வாணியம்பாடி | 44 |
| 2 | சதாம் உசேன் | சாபுதீன் | முஸ்லீம் | கூலி | காதர்பேட்டை, வாணியம்பாடி | 30 |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | உத்தரவு | |
| 24.07.17 | 24.07.17 | Station bail – 02.08.2017 | Station bail – 02.08.2017 | 07.10.23 | 27.03.26 | 01.04.26 | – |

இவ்வழக்கானது 22.06.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 27.03.2026–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி

அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.செந்தில்வேலன், B.A.,B.L., DPM அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

**தீர்ப்புரை**

**1. குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:**

இவ்வழக்கில் வாணியம்பாடி நகர காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட வாணியம்பாடி கல்மண்டபம் MR லாட்ஜ் ஓனர் வீட்டின் அருகில் கடந்த 24.07.2017ம் தேதி இரவு 07.30 மணிக்கு வாதி இப்ராஹிமும் அவரது தம்பி சாட்சி 2 முகமது பாஷா மற்றும் நேதாஜி நகரை சேர்ந்த கார்த்திக் ஆகிய மூவரும், வாதி இப்ராஹிம் தனது Hero Honda Spender + இருசக்கர வண்டியை 1ம் எதிரி ஜெயலாபுதின் என்பர் மூலமாக அடமானம் வைத்திருந்ததை மீட்டு கொடுக்கும்படி 1ம் எதிரி ஜெயலாபுதினை கேட்டபோது 1ம் எதிரி ஜெயலாபுதின் வாதி இப்ராஹிம்மை பார்த்து போடா தேவிடியா பையா மீட்டு கொடுக்க முடியாது என்று சொல்லி வாதியை கையால் நெஞ்சு மீதும், தடுக்க வந்த வாதியின் தம்பி சாட்சி 2 முகமது பாஷாவை 2ம் எதிரி சதாம் உசேன் என்பவர் டேய் தேவிடியா பையா நீ என்னடா பெரிய ஆளா என்று சொல்லி கையால் முதுகு மீதும் குத்தி, இருவரையும் கீழே தள்ளி எதிரிகள் இருவரும் நெஞ்சு மீது காலால் உதைத்து லேசான உள்காயம் ஏற்படுத்தியுள்ளனர். எனவே, எதிரிகள் இ.த.ச பிரிவுகள் 294(பி), 323-ன் கீழான தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வாணியம்பாடி நகர காவல் உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் இ.த.ச பிரிவுகள் 294(பி), 323-ன்கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரிகள் ஆஜரானதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, பின்னிட்டு இருதரப்பு வாதமும் கேட்டு, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323–ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூற வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.5** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5.அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :**

5(i) அ.சா.1 இப்ராஹிம் இவ்வழக்கு சம்பவத்தில் காயமுற்றவர் மற்றும் புகார்தாரர் ஆவார். கடந்த 24.07.2017ம் தேதி இரவு 08.00 மணிக்கு காதர்பேட்டையிலிருந்து பெட்ரோல் தீர்ந்ததால் தனது நண்பருக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தை தள்ளிக்கொண்டு சென்று கொண்டிருந்தபோது பின்னல் 2, 3 நபர்கள் வந்து அடித்ததால் மயக்கமாகி விட்டதால் சிகிச்சைக்காக வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு சேர்த்துள்ளார்கள். வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் அ.சா.5 ராஜேந்திரன், உதவி ஆய்வாளர் வாணியம்பாடி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சையில் இருந்த அ.சா.1 இப்ராஹிம்மை விசாரித்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பெற்றுள்ளார்.

5 (ii) அ.சா.5 ராஜேந்திரன், உதவி ஆய்வாளர் அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலம் பெற்று அதற்கேற்ப சி.எஸ்.ஆர். எண் 355/2017 என வழங்கி பரிசீலனைக்குப் பின்னர் நிலைய குற்ற எண் 294/2017 இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 சட்டத்தின் கீழ் அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு, 02.08.2017ம் தேதி பகல் 13.00 மணிக்கு சாட்சிகள் அ.சா.4 ஸ்டாலின், இம்தியாஸ் ஆகியோர்கள்

முன்னிலையில் அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

5(iii) பின்னர் சாட்சிகள் அ.சா.1 இப்ராஹிம், அ.சா.2 முகமது பாஷா, அ.சா.3 கார்த்திக், அ.சா.4 ஸ்டாலின், இம்தியாஸ் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் 1ம் எதிரி ஜெயிலாபுதின் என்பவரை 02.08.2017ம் தேதி 14.00 மணிக்கு காதர்பேட்டை ஜங்சனிடமும், 2ம் எதிரி சதாம் உசேனை 15.05 மணிக்கு காதர்பேட்டை ஜங்சனிடமும் முறைப்படி கைது செய்து நிலைய பிணையில் விடுவித்துள்ளார். வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள் மீதான குற்றம் உண்மையென தெரிய வந்ததால் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு பாதகமாக அமைந்ததை சாட்சிய சூழ்நிலைகளை எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என கூறினார்கள். மேலும். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்.</u>**

7. இவ்வழக்கில் கடந்த 24.07.2017ம் தேதி இரவு 07.30 மணிக்கு வாணியம்பாடி கல்மண்டபம் MR லாட்ஜ் ஓனர் வீட்டின் அருகில் அ.சா.1 இப்ராஹிமும் அவரது தம்பி அ.சா.2 முகமது பாஷா மற்றும் நேதாஜி நகரை சேர்ந்த கார்த்திக் ஆகிய மூவரும், வாதி இப்ராஹிம் தனது Hero Honda Spender + இருசக்கர வண்டியை 1ம் எதிரி ஜெயலாபுதின் என்பர் மூலமாக அடமானம் வைத்திருந்ததை மீட்டு கொடுக்கும்படி 1ம் எதிரி

ஜெயலாபுதினை கேட்டபோது 1ம் எதிரி ஜெயலாபுதின் வாதி இப்ராஹிம்மை பார்த்து போடா தேவிடியா பையா மீட்டு கொடுக்க முடியாது என்று சொல்லி வாதியை கையால் நெஞ்சு மீதும், தடுக்க வந்த அ.சா.2 முகமது பாஷாவை 2ம் எதிரி சதாம் உசேன் என்பவர் டேய் தேவிடியா பையா நீ என்னடா பெரிய ஆளா என்று சொல்லி கையால் முதுகு மீதும் குத்தி, இருவரையும் கீழே தள்ளி எதிரிகள் இருவரும் நெஞ்சு மீது காலால் உதைத்து லேசான உள்காயம் ஏற்படுத்தியதாக அரசு தரப்பில் எதிரிகள் மீது குற்றம்சாட்டப்பட்டப்பட்டுள்ளது.

8. எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில் எதிரிகள் தரப்பிலும் புகார்தரார் தரப்பிலும் சமாதானமாக சென்று விட்டார்கள். இவ்வழக்கில் அரசு தரப்பு சாட்சிகள் யாரும் அரசு தரப்பை வழு சேர்க்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் எதிரிகளுக்கு சந்தேகத்தின் பலனை அளித்து விடுதலை செய்ய வேண்டும் என வாதங்கள் முன்வைக்கப்பட்டன.

9. புகார்தாரர் மற்றும் காயமுற்ற சாட்சியான இப்ராஹிம் அரசு தரப்பில் அ.சா.1ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 இப்ராஹிம் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " 24.07.2017ம் தேதி இரவு 08.00 மணியளவில் காதர் பேட்டையிலுருந்து பெட்ரோல் தீர்ந்ததால் எனது நண்பருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் ஒன்றை தள்ளிக்கொண்டு சென்று கொண்டிருந்தேன், **அப்போது என் பின்னால் 2, 3 நபர்கள் வந்து அடித்தார்கள், அவர்கள் யாரென்று எனக்கு தெரியவில்லை,** அதன்பின்பு எனக்கு மயக்கம் ஏற்பட்டதால் என்னை வாணியம்பாடி அரசு மருத்துவனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள். " என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது " எனது பெயர், முகவரி போன்ற விவரங்களை குறிப்பெடுத்துக்கொண்டு எழுதப்படாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றார்கள். " என சாட்சியமளித்துள்ளார்.

10. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 முகமது பாஷா தனது நீதிமன்ற விசாரணையின்போது, " 3 வருடங்களுக்கு முன்பு இரவு 08.00 மணியளவில் எனது

அண்ணன் அ.சா.1 வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் அடிப்பட்டு சிகிச்சையில் இருப்பதாக போலிசார் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் தெரிவித்தார்கள். பின்பு போலிசார் வீட்டிடம் வந்து கையொப்பம் மட்டும் வாங்கி சென்றார்கள், இவ்வழக்கை குறித்த மற்ற விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது. " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது " **சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், சம்பவத்தின்போது நான் வீட்டில் இருந்தேன்.** " என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

11. இவ்வழக்கில் மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 கார்த்திக் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " கடந்த 2016 அல்லது 2017ம் வருடம் ஒருநாள் மாலை 06.30 மணியளவில் ஆசிரியர் காலனியில் உள்ள எனது பாட்டி வீட்டிற்கு சென்றுவிட்டு கோணாமேடு வழியாக நேதாஜி நகர் செல்வதற்காக வந்து கொண்டிருந்தபோது அங்கிருந்த போலிசார் என்னை அழைத்து ஒரு கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 ஸ்டாலின் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " 2017ம் வருடம் 8ம் மாதத்தில் ஆசிரியர் நகரில் உள்ள எம்.ஆர்.லாட்ஜ் ஓனர் வீட்டினிடம் போலிசார் வரைபடம் வரைந்து கொண்டிருந்தார்கள். நான் வேலை முடித்துவிட்டு என் வீடு வி.எஸ்.கே. நகரில் இருப்பதால் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். அப்போது என்னிடம் போலிசார் பெயர், முகவரி போன்ற விவரங்களை கேட்டுக்கொண்டு கையொப்பம் வாங்கினார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. " என சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது " போலிசார் பெயர், முகவரி போன்ற விவரங்களை கேட்டுக்கொண்டு ஒரு வெற்று தாளில் கையொப்பம் பெற்றார்கள் என்றும், அதில் தற்போது என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியாது என்றும், வழக்கு விவரம்

எதுவும் எனக்கு தெரியாது என்றும், போலிசார் என்னை வழக்கு சம்மந்தமாக விசாரிக்கவில்லை. " என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்.

13. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 4 விசாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளார். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கின் அ.சா.1 இப்ராஹிம், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 முகமது பாஷா, பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 ஸ்டாலின் ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியமளித்துள்ளனர். மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 கார்த்திக் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், அரசு தரப்பு வழக்கு வலுசேர்க்கும் வகையில் எவ்வித சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை. ஆகையால், அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்களின் சாட்சியம் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

14. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5 ராஜேந்திரன், உதவி ஆய்வாளர், அவரது சாட்சியத்தில் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் அ.சா.1 இப்ராஹிமை விசாரித்து அ.சா.ஆ.3 புகார் வாக்குமூலத்தினைப் பெற்று அ.சா.ஆ.4 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.5 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.6 மாதிரி வரைபடம் தயார் செய்ததை குறித்தும், சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்து, எதிரிகளை கைது செய்து நிலைய பிணையில் விடுவித்தது குறித்தும், புலன் விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது.

15. அ.சா.1 இப்ராஹிம் போலீசார் விசாரணையின்போதும், புகார் வாக்குமூலத்திலும் 1ம் எதிரி ஜெயலாபுதினை அ.சா.1ஐ பார்த்து போடா தேவிடியா பையா மீட்டு கொடுக்க முடியாது என்று சொல்லி வாதியை கையால் நெஞ்சு மீதும், தடுக்க வந்த அ.சா.2 முகமது பாஷாவை 2ம் எதிரி சதாம் உசேன் என்பவர் டேய் தேவிடியா பையா நீ

என்னடா பெரிய ஆளா என்று சொல்லி கையால் முதுகு மீதும் குத்தி, இருவரையும் கீழே தள்ளி எதிரிகள் இருவரும் நெஞ்சு மீது காலால் உதைத்து லேசான உள்காயம் ஏற்படுத்தியதாகவும் கூறிவிட்டு, அதற்கு முற்றிலும் மாறாக, தனது நீதிமன்ற விசாரணையின்போது, அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக காதர் பேட்டையிலுருந்து பெட்ரோல் தீர்ந்ததால் எனது நண்பருக்கு சொந்தமான இருசக்கர வாகனம் ஒன்றை தள்ளிக்கொண்டு சென்று கொண்டிருந்தேன், **அப்போது என் பின்னால் 2, 3 நபர்கள் வந்து அடித்தார்கள், அவர்கள் யாரென்று எனக்கு தெரியவில்லை, எழுதப்படாத வெள்ளை தாளில் தான் கையொப்பம் செய்தேன்** என சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.ஆ.3 புகார்வாக்குமூலமும் அ.சா.1 ன் சாட்சியமும் சந்தேகத்திற்கு உள்ளாகிறது என இந்நீதிமன்றம் கருதுகிறது. கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 முகமது பாஷா அவரது சாட்சியத்தில் **சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், சம்பவத்தின்போது நான் வீட்டில் இருந்தேன்** என சாட்சியமளித்துள்ளதாலும், மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 கார்த்திக் அவரது சாட்சியத்தில் **போலிசார் என்னை அழைத்து கையொப்பம் வாங்கினார்கள், எதற்காக என்று தெரியாது** என பிறழ் சாட்சியமளித்திருப்பதாலும், பார்வை மகசர் சாட்சியான அ.சா.4 ஸ்டாலின் அவரது சாட்சியத்தில் போலிசார் பெயர், முகவரி போன்ற விவரங்களை கேட்டுக்கொண்டு ஒரு வெற்று தாளில் கையொப்பம் பெற்றார்கள் என்றும், அதில் தற்போது என்ன எழுதப்பட்டுள்ளது என்ற விவரம் தெரியாது என்றும், வழக்கு விவரம் எதுவும் எனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார். எனவே, அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியான அ.சா.5ன் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு எதிரிகள் குற்றம் புரிந்தார் என தீர்மானிக்க இயலாது என்பதாலும், அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் 294(பி), 323 கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

16. **<u>முடிவாக,</u>** இவ்வழக்கின் எதிரிகள் மீதான இ.த.ச. பிரிவுகள் 294(பி), 323 சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்து எதிரிகள் குற்றவாளிகள் இல்லை

என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 255(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

17. இவ்வழக்கில் அரசு தரப்பில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எதிரிகள் எழுதி கொடுத்த பிணை பத்திரத்தை மேல்முறையீடு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2025–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 01ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

**அரசு தரப்பு சாட்சிகள்**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.இப்ராஹிம் |
| 2. | அ.சா.2 | திரு.முகமது பாஷா |
| 3. | அ.சா.3 | திரு.கார்த்திக் |
| 4 | அ.சா.4 | திரு.ஸ்டாலின் |
| 5 | அ.சா.5 | திரு.ராஜேந்திரன், உதவி ஆய்வாளர் |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 02.08.2017 ஆம் தேதியிட்ட புகார்வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம். |
| 2. | அ.சா.ஆ.2 | 02.08.2017 ஆம் தேதியிட்ட பார்வை மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம். |
| 3. | அ.சா.ஆ.3 | 02.08.2017 ஆம் தேதியிட்ட புகார்வாக்குமூலம். |

| | | |
|---|---|---|
| 4. | அ.சா.ஆ.4 | 02.08.2017 ஆம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை |
| 5. | அ.சா.ஆ.5 | 02.08.2017 ஆம் தேதியிட்ட பார்வை மகசர். |
| 6. | அ.சா.ஆ.6 | 02.08.2017 ஆம் தேதியிட்ட மாதிரி வரைபடம். |

**அரசு தரப்பு சான்று பொருள்** – இல்லை.

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்** – இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணம்** – இல்லை.

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா.ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K

JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.